சுருக்கம்

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சியிலுள்ள டிராக்டர்கள் மற்றும் சிறிய லாரி ஒட்டுநர் பணியிடங்கள் தோற்றுவித்தல் மற்றும் அவற்றை நிரப்புதல் – வெளியிடப்பட்ட அரசாணைக்கு திருத்தம் வெளியிடுதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை

அரசாணை (நிலை) எண். **37** நாள்: **01.02.2011**

இயக்ககம் 3 FEB 2011 சென்னை

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 205, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 23.3.1989.
2. அரசாணை (நிலை) எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.3.1998.
3. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண். 19539/2009/அ3, நாள் 24.10.2009 மற்றும் 15.10.2010.

---

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பேரூராட்சிகளில் பணிபுரியும் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களுக்கென பணி விதிகள் அரசாணை (நிலை) எண்.205, ஊரக வளர்ச்சித் துறை நாள் 23.03.1989–ல் வெளியிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி அரசாணையில், டிராக்டர் ஒட்டுநர் பணியிடத்திற்கான கல்வி தகுதியாக, பின்வரும் தகுதிகளை குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்:-

**Class VI**

**Category I**

| | | |
|---|---|---|
| Tractor Driver by direct recruitment | i) | Pass in VIII Standard |
| | ii) | Possession of driving license of heavy vehicle without police (or) Magisterial endorsement and experience in lorry driving for five years of which atleast three years must be in driving heavy vehicles என குறிப்பிடப்பட்டுள்ளது. |

மேலும் பேரூராட்சிகளின் பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில், பேரூராட்சிகளுக்கு டிராக்டர் வாகனம் வாங்க அனுமதி அளிக்கப்பட்டது என்றும், மேற்படி வாகனத்தை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் ஓட்டுநர்கள் தேவைப்பட்டது என்றும், ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்படாத பேரூராட்சிகளில் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களில் தற்காலிக ஏற்பாடாக ஒட்டுநர் உரிமம் பெற்றுள்ளவர்களை கொண்டு, வாகனங்கள் இயக்கப்பட்டு, பொது சுகாதாரத்தில் சுணக்கம் ஏற்படாமல் மேம்படுத்தப்பட்டது என்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.3.1998–ல், பேரூராட்சி மன்றங்களிலிருந்து செயற்குறிப்பினை பெற்று, நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரு மோட்டார் வாகனத்திற்கு ஒரு ஓட்டுநர் என்ற விகிதத்தில் புதிய ஓட்டுநர் பணியிடங்களை ஊதியமேற்ற முறையில் தோற்றுவித்துக் கொள்ள பேரூராட்சிகள் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும், இவ்வரசாணையில் ஓட்டுநர் பணியிடங்களை நிரப்புதல் தொடர்பான கீழ்க்கண்ட வழிகாட்டி அறிவுரைகள் வழங்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:-

1. புதிதாக ஏற்படுத்தப்படும், ஓட்டுநர் பணியிடங்களில் அந்தந்த பேரூராட்சிகளில், ஓட்டுநர் உரிமம் பெற்ற அலுவலக உதவியாளர்கள் (Regular Office Assistant and not NMR) அவர்களை பதவி உயர்வளித்து ஓட்டுநர் பதவியில் அமர்த்திக் கொள்ள வேண்டும்.

2. ஓட்டுநர் உரிமம் பெற்ற தகுதி வாய்ந்த அலுவலக உதவியாளர்கள் இல்லாத நிலையில் ஏற்கனவே பேரூராட்சிகளில் NMR/தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் ஓட்டுநர்களை அப்பணியிடத்தில் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்து நிபந்தனைகளுக்குட்பட்டு எவ்வாறு வரன்முறைப்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

   அ) முறையான அனுமதிக்கப்பட்ட ஓட்டுநர் பணியிடம் இல்லாமல் வேலை வாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிவரும் ஓட்டுநர்களை ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்படும் நாள் முதல் முறையான ஊதிய விகிதத்தின் கீழ் கொண்டு வரலாம்.

   ஆ) வேலைவாய்ப்பகம் மூலம் தேர்வு செய்யப்படாமல், ஆனால் வேலைவாய்ப்பகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்துள்ள தற்காலிக ஓட்டுநர்களையும் ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்படும் நாள் முதல் முறையான ஊதிய விகிதத்தின் கீழ் கொண்டு வரலாம்.

   இ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்யாமல் தற்காலிக ஓட்டுநர்களாக பணிபுரிந்து வருபவர்களை முறையான ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட பின்னர் வேலை வாய்ப்பகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தி அவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்த நாள் முதல் அப்பதிவு அடிப்படையில் முன்னுரிமை அளித்து அவர்களை முறையான ஊதிய விகிதத்தில் கொண்டு வரலாம்.

3. மேலும் ஓட்டுநர் உரிமம்பெற்ற தகுதி வாய்ந்த அலுவலக உதவியாளர்கள் மற்றும் என்.எம்.ஆர்/தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் ஓட்டுநர்கள் இல்லாத

35

நிலையில் மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று, பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேற்படி அரசாணையின்படி, பேரூராட்சிகளின் மன்ற செயற்குறிப்புகளின் அடிப்படையில் பேரூராட்சிகளின் இயக்குநரால் தோற்றுவிக்கப்பட்ட ஓட்டுநர் பணியிடங்கள், அரசாணை எண். 212, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 29.11.2001–ன்படி, நேரடி பணி நியமனங்களுக்கு 2006–ம் ஆண்டு வரை, தடையிருந்ததால், மேற்படி பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்றும், பேரூராட்சிகளில் டிராக்டர் (அல்லது) மினி லாரி வாங்கப்பட்டும், ஓட்டுநர்கள் இல்லாமையால், பொது சுகாதாரம் பாதிக்காத வகையில், அரசாணையின்படி தினக்கூலி பணியாளர்களோ அல்லது ஓட்டுநர் உரிமம் பெற்ற அலுவலக உதவியாளர்களோ இல்லாத நிலையில், தற்காலிக ஏற்பாடாக அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களில் ஓட்டுநர் உரிமம் பெற்ற தகுதி வாய்ந்த பணியாளர்களைக் கொண்டு, டிராக்டர் அல்லது மினி லாரிகள் இயக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டன என்றும், இவ்வாறு ஓட்டுநராக பணிபுரிந்து வரும் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள், தங்களை பதவி உயர்வு மூலமாக ஓட்டுநர்களாக நியமனம் செய்யுமாறு தொடர்ந்து பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார். ஏனவே, பேரூராட்சிகளில் உள்ள ஓட்டுநர் பணியிடங்களில் அரசாணை எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.03.1998–ன்படி ஓட்டுநர் உரிமம் பெற்ற தகுதி வாய்ந்த அலுவலக உதவியாளர்கள் இல்லாத நிலையில், ஏற்கனவே பேரூராட்சிகளில் என்.எம்.ஆர்/தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் அரசு நிலையாக்கப்படாத கீழ்நிலை பணியாளர்களுக்கிடையேயான ஒட்டுமொத்த முன்னுரிமைப் பட்டியலில், அரசாணை (நிலை) எண்.205, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 23.03.1989–ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஓட்டுநர் பதவிக்குரிய கல்வித்தகுதி மற்றும் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்து, ஓட்டுநர் பதவியில் நியமிக்க உரியத் தகுதி பெற்ற பொது சுகாதாரம், குடிநீர், தெருவிளக்கு பராமரிப்பு போன்ற அனைத்து பிரிவுகளில் பணிபுரியும் கீழ்நிலை பணியாளர்களுக்கிடையிலான பேரூராட்சி அலகில் உள்ள பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களுக்கு பணி நியமன அலுவலரான செயல் அலுவலரே பதவி உயர்வு மூலமாக ஓட்டுநர் பதவி உயர்வு வழங்கலாம் என மேற்படி அரசாணை (நிலை) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.03.1998–ல் பத்தி 4ல்–1(ஆ)–ற்கு உரிய திருத்தங்கள் வெளியிடுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அரசாணை (நிலை) எண்.205, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 23.03.1989 மற்றும் அரசாணை (நிலை) எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.03.1998 ஆகியவற்றிக்கு கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் வெளியிடப்படுகிறது:–

1. அரசாணை (நிலை) எண்.205, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 23.03.1989–ல் Class VI, Category-ல் நேரடி நியமன வழியாக மட்டுமே (By Direct recruitment) ஓட்டுநர் பணி நியமனங்கள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, இதில் பதவி உயர்வின் மூலம் (By promotion) ஓட்டுநர் பணி நியமனத்திற்குரிய கல்வித் தகுதியை பெற்றுள்ள அரசு நிலையாக்கப்படாத கீழ்நிலைப் பணியாளர்களை பதவி உயர்வு மூலம் ஓட்டுநராக நியமனம் செய்யலாம்; மற்றும்

2. அரசாணை (நிலை) எண்.23 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.03.1998–ன்படி, ஓட்டுநர் உரிமம் பெற்ற தகுதி வாய்ந்த அலுவலக உதவியாளர்கள் இல்லாத நிலையில், ஏற்கனவே பேரூராட்சிகளில் என்.எம்.ஆர்/தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் அரசு நிலையாக்கப்படாத கீழ்நிலை பணியாளர்களுக்கிடையேயான ஒட்டுமொத்த முன்னுரிமைப் பட்டியலில், அரசாணை (நிலை) எண்.205, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 23.03.1989–ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஓட்டுநர் பதவிக்குரிய கல்வித்தகுதி மற்றும் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்து, ஓட்டுநர் பதவியில் நியமிக்க உரியத் தகுதி பெற்ற பொது சுகாதாரம், குடிநீர், தெருவிளக்கு பராமரிப்பு போன்ற அனைத்து பிரிவுகளில் பணிபுரியும் கீழ்நிலை பணியாளர்களுக்கிடையிலான பேரூராட்சி அலகில் உள்ள பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களுக்கு பணி நியமன அலுவலரான செயல் அலுவலரே பதவி உயர்வு மூலமாக ஓட்டுநர் பதவி உயர்வு வழங்கலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:-</u>
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 600 108.
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
<u>நகல்:-</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை,
சென்னை –600 009.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது.)

2/2/11
பிரிவு அலுவலர்.
2/2/11